## மினுவன்கொட பிரதேச சபை

## கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 27 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மினுவன்கொட பிரதேச சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையினால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கப் வாகனத்திற்கு மீளாய்வாண்டில் கடன் தவணைப் பணத்தில் கொடுப்பனவு செய்த ரூபா 1,059,409 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மினுவன்கொட மற்றும் உடுகம் பொல உப அலுவலகத்தின் மூலமாக பராமரிக்கப்படும் குடிநீர் கட்டண பதிவேட்டின்படி மீளாய்வாண்டில் குடிநீர் கட்டணமாக ரூபா 356,975 கிடைக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றின் பிரகாரம் பெற்றுக்கொண்டது ரூபா 365,875 ஆக காணப்பட்டமையால் ரூபா 8,900 பெறுமதியானவை கணக்கீட்டில் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(இ) ஏசியன் அபிவிருத்தி வங்கியில் முதன்முதலாக கிடைத்த கடன் திட்டத்திற்காக கடன் தவணைப் பணம் செலுத்தும் போது கடன் தொகையும் அதற்குரிய வட்டியும் சேர்ந்த கூட்டுமொத்த தொகை ரூபா 739,770 கொடுப்பனவு செலுத்த வேண்டிய போதும் 2013 ஆம் ஆண்டில் இரு தடவைகள் கொடுப்பனவு செய்தமையால் அதனை 2015 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யும் போது மீளாய்வாண்டிற்கான செலவினமாக கருதப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏசியன் அபிவிருத்தி வங்கியினால் இரண்டாவதாக கிடைத்த கடன் கொடுப்பனவு செய்யும் போது 4 மாதத்திற்காக உள்ள வட்டித்தொகை ரூபா 476,664 வட்டிக் கணக்கிற்கு வரவில் பதியப்படாமல் வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது.

(உ) ஒப்பந்தம் முடிப்பதற்காக செலுத்திய 20 வீத முற்பணத்தொகை ரூபா 3,750,667 முற்கூட்டிய முற்பண கணக்கிற்கு வரவு வைக்கப்படாது கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் இறுதியில் கிடைக்க வேண்டிய முற்பண மீதி ரூபா 1,143,183 தொகையில் உள்ள 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட தீர்க்கப்பட்டிராத ரூபா 910,450 தொகையை இனங்கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் முடிவடைந்த வேலைகளுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 12,405,308 பெறுமதியான கடன்பட்டோர் மீதி 2015 திசெம்பர் 31 ஆம் திகதி

வரை அறவிடப்பட்டிராமல் இருந்தது. இத்தொகை மொத்த கடன்பட்டோர் மீதியில் 15 வீதத்திற்கு மேலாக இருந்தது.

(இ) உள்நாட்டு இறை வரி ஆணையாளருக்கு சமர்ப்பித்திருக்க வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 1,194,194 தீர்க்கப்படாமல் 2012 ஆண்டில் இருந்து கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 கணக்காய்வு சான்றின்மை

கூட்டுமொத்த தொகை ரூபா 75,025,657 பெறுமதியாக உள்ள இரு கணக்கு விடயங்களுக்கான எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமையால் கணக்காய்வில் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

### 1.3.4 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காமை

பின்வரும் சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் காணப்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டிருந்தது.

(அ) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 24 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச சபைக்கு சொந்தமான கிராமிய வீதிகளை எடுத்து அதனை வர்த்தகமானி மூலமாக அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபைக்கு சொந்தமான கிராமிய வீதிகள் எடுப்பதற்காக 1993 ஆம் ஆண்டுக்கு பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 193 பந்தியின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் குறைநிரப்பின் ஊடாக ஒப்பீடு செய்து ஒவ்வொரு செலவு விடயங்களிலும் உள்ள மேலதிகக்கட்டணம் அல்லது பற்றாக்குறை விலகல் பற்றிய விபரம் சொல்வதற்கான கூற்று அந்த வருடத்தில் டிசம்பர் 31 திகதிக்கு செய்யப்படவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 218 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மொத்த காணி கட்டிடம் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை இருப்பு கணக்கெடுப்பு சபை மூலமாக பரீட்சிப்பு செய்வதற்கு தவிசாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1993 இலக்கம் 24 ஆகிய விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய சட்டத்தின் பிரகாரம் 1983 வருடத்தில் இருந்து அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட சகல ஊழியர்களுக்கும் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்பு செய்யப்பட வேண்டும். சபையினால் அதற்காக கடிதம் எழுதப்பட்டு தனிப்பட்ட இலக்கம் பெற்றுக்கொண்ட பின்னர் மாதாந்த பங்களிப்பு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டி இருந்த போதிலும் 51 ஊழியருக்கான இலக்கம் எடுக்கப்படாது ரூபா 2,523,842 பங்களிப்புத்தொகை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா. 3,234,068 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா. 18,673,995 ஆக விளைந்திருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம், மற்றும் கிடைக்க வேண்டிய வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு.

| ,y | வருமான விடயம் | பாதீடு (ரூபா) 000' | உண்மை (ரூபா) 000' | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) 000' |
|---|---|---|---|---|
| (i) | ஆதனவரிகள் மற்றும் பற்றாணைக் கட்டணம் | 20,077 | 22,098 | 10,510 |
| (ii) | வாடகைகள் | 3,084 | 3,433 | 107 |
| (iii) | உரிமங்கள் | 1,735 | 1,710 | - |
| (iv) | ஏ.வருமானம் | 9,211 | 10,265 | 158 |
| | மொத்தம் | 34>107 | 37>506 | 10,775 |

2.2.2 ஆதனவரி

2016 யூன் 30 ஆந் திகதிக்கு ரூபா 7,419,414 பெறுமதியான ஆதன வரி அறவிடவேண்டியிருந்தது.

2.2.3 கைத்தொழில் மற்றும் வியாபார வரி

சபையின் எல்லைக்குள் உள்ள கைத்தொழில் மற்றும் வியாபாரம் ஆரம்பிக்கும் வளர்ச்சி ஏற்பட்டதாக அறிக்கையாகியிருந்த போதிலும் அதற்கு சமனாக இந்த வருமான மூலங்களில் இருந்து அதிகரிப்பு காணப்படவில்லை. 2013 ஆண்டில் 1,696 எண்ணிக்கையானவை படிப்படியாக முன்னைய ஆண்டிலும் குறைவடைந்து செல்கின்றமை

காணப்பட்டமையினால் இது பற்றி பிரதேசத்தின் குறிப்பிட்ட இடத்தில் பரீட்சிப்பு மேற்கொண்டு எண்ணிக்கையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கடை வாடகைகள்

(அ) 2005 ஆம் ஆண்டில் இருந்து உடுகம்பொல ஒரு கடை வாடகைக்கு கொடுத்து கிடைக்க வேண்டிய ரூபா 32,376 அறவிடுவதற்கு 2009 ஆண்டில் வழங்கப்பட்ட வழக்கின்படி தவணைப்பணம் மூலமாக அறவிடுவதற்கு தீர்மானம் செய்திருந்த போதிலும் இதுவரைக்கும் அறவிடுவதற்கு சபை தவறியுள்ளது.

(ஆ) உடுகம்பொல கடைத்தொகுதியில் மேல்மாடி 8 கடைகள் 2012 திசெம்பர் 9 ஆந் திகதியில் இருந்து திருத்தம் செய்யப்பட்டு வாடகைக்கு கொடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை எல்லைக்குள் உள்ள சகல தொலைத்தொடர்பு கோபுரங்களையும் இனம்கண்டு 2009 ஏப்ரல் 17 ஆம் திகதி இலக்கம் 1597/8 ஆகிய விசேட வர்த்தகமானியின் பிரகாரம் கட்டணம் அறவிடுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடுகம்பொல உப அலுவலக எல்லைக்குள் பொருத்தப்பட்டிருந்த 14 தொலைத்தொடர்பு கோபுரங்களை இனங்காணப்பட்டிருந்த போதும் 9 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு இதுவரை கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மாவோதல உப அலுவலக எல்லைக்குள் உள்ள 11 தொலைத்தொடர்பு கோபுரம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் ஒரு கோபுரத்திற்கு சிறிய தொகையான ரூபா 1,000 அறவிடப்பட்டிருந்தது.

(இ) பத்தடுவன உப அலுவலகத்தில் இருந்து 6 தொலைத்தொடர்பு கோபுரத்திற்கு கடந்த ஆண்டு சம்மந்தமாக ரூபா 187,858 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.6 சந்தை வருமானம்

2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் உடுகம்பொல வாராந்த சந்தை வாடகைக்கு வழங்குவதற்கு கேள்வி மனுக்கோரல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 ஏனைய வருமானம்

வட்டபொத்த நீர் வழங்கல் செயற்திட்டத்தில் 4 நீர் நுகர்வோருக்கு 2014 - 2015 ஆண்டு காலப்பகுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 20,495 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 ஆண்டில் இருந்து 2010 ற்குள் உள்ள 5 வருடங்களுக்கு மேலான ரூபா 15,982,946 பெறுமதியான வைப்பு நிலுவையும் 2015 ஒக்டோபர் 20 ஆந் திகதி வரைக்கும் வருமானத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 5 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 69,800 வருமானத்திற்கு எடுக்கப்படாது வைப்புப் பேரேட்டில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபை எல்லைக்குள் உள்ள கேள்வி கோரப்பட்ட காணியில் சபைக்கு சொந்தமாக எடுக்கப்பட்ட காணித்துண்டில் பொதுநோக்கத்திற்கு பாவிப்பதற்கு ஏற்றவாறு இல்லாமல் 19 காணித்துண்டுகள் இருந்தன.

(இ) 5 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்பட்டிராத முற்பண நிலுவை ரூபா 920,450 காணப்பட்டுள்ளன.

(ஈ) சபையில் இரு நடைமுறை வங்கிக் கணக்கு மீளாய்வாண்டில் உள்ள சராசரி மாதாந்த மீதி ரூபா 28,051,209 ஆக காணப்பட்டுள்ளது. இந்த மேலதிகமாக காணப்படும் தொகையை நிலையான வைப்பில் முதலீடு செய்து கிடைக்கவேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் சபைக்கு கிடைகப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 மார்ச் 15 மற்றும் 2014 மே 23ம் திகதிகளில் பௌர்ணமி தின நிகழ்வு செய்வதற்கான வெள்ளைத்துணி 5000 மீற்றர் கொள்வனவு செய்திருந்த போதிலும் அதில் 2540 மீற்றர் 2014 திசெம்பர் 2ம் திகதி விநியோகம் செய்யப்பட்டிருந்தது. ரூபா 492,000 பெறுமதியான மிகுதித்துணி 2460 மீற்றர் மீளாய்வாண்டில் கொடுக்கப்பட்டிராது 2016 மே 10ந் திகதி வரைக்கும் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது.

### 3.2 காணி பிரித்தலுக்கான அனுமதி பெற்றுக்கொண்டமை

சபையினால் காணி பிரித்தலுக்கான திட்டத்தின் அனுமதி கொடுக்கும் போது எடுத்துக்கொண்ட வருமானத்தின் மாதிரியை பரீட்சித்தபோது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது வசதிக்காக பிரித்துள்ள றூட் ஒன்றும் பேச்சஸ் 111.61 உள்ள 4 காணித்துண்டிற்கு காணி உறுதிப்பத்திரம் கணக்காய்வுத் திகதி 2015 நவம்பர் 20ம் திகதி வரைக்கும் சபைக்கு கிடைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி பிரித்தல் அனுமதி வழங்கும் போது காணியின் பெறுமதியில் 1 வீதம் சபையினால் அறவிட இருந்த போதிலும் காணிகளின் பெறுமதி ரூபா 47,551,700 பெறுமதியான 5 துண்டுகளிற்கு விலை மதிப்பீடு மேற்கொள்ளும்போது வருமான பரிசோதகரின் விலை மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு மதிப்பீட்டை மேற்கொண்ட போதும் காணியின் ஏல விற்பனை பெறுமதியை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விவசாய விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்காக பயிற்சியளித்தல் - இஸ்ரேல்

2015 மார்ச் 5ம் திகதியில் இருந்து 2015 மார்ச் 13 ஆந் திகதி வரைக்கும் மேற்படி பயிற்சி திட்டத்திற்கு பங்கேற்பதற்கு 21 உறுப்பினர்களுக்காக ரூபா 5,118,876 பெறுமதியான தொகை முற்பணமாக கொடுக்கப்பட்டிருந்தது. இவ் விஜயத்தின் போது பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் அனுபவம் சபையின் சேவையை அபிவிருத்தி செய்வதற்கு பிரயோகிக்கமுடியும் என சபைச் செயலாளர் அறிவித்திருந்த போதிலும் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டு வந்தபின்னர் 60 நாட்கள் முடிவடைவதற்குள் 2015 மே 15 ஆந் திகதியில் சபை கலைக்கப்பட்டிருந்தது. அதனால் இந்த வெளிநாட்டு பயணத்திற்கு செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,875,120 பெறுமதியானவை பயனற்ற செலவினமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டு பயணத்தின் பின்னர் உறுப்பினர்கள் சபை எல்லைக்குள் உள்ள மக்களுக்கு வழங்கிய சேவை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்திட்ட தாமதம்

2013 ஆம் மேல் மாகாண குறைநிரப்பு மூலமாக கொட்டுகொட மின்சார பிரேத எரியூட்டும் இடம் கட்டுவதற்காக ரூ 8,655,000 ற்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 1,360,967 2014 ஜனவரி 20ஆம் திகதியும் ரூபா 7,294,032 2015 ஜனவரி 28ம் திகதியும் பிரதேச சபைக்கு கிடைக்கப்பட்டிருந்தது. 2013 நவம்பர் 12ஆந் திகதியில் ஒப்பந்தப்படி ரூபா 6,804,838 பெறுமதியான இவ் ஒப்பந்தம் வழங்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 7,621,419 பெறுமதியான சென்மதியாளர் காட்டப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் கிடைக்கப்பட்ட இத்தொகையை வைத்திருப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் மாகாண திறைசேரியில் அனுமதியை பெற்றிருக்கவில்லை.

### 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

2015 ஜனவரியில் இருந்து ஒக்டோபர் வரையுள்ள காலப்பகுதிக்கு குப்பைகளை எடுப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 8,096,292 செலவு செய்யப்பட்டிருந்தது. பிரதேச சபை எல்லை 127.57 கிலோமீற்றர் மற்றும் கிராம சேவையாளர் பிரிவு 115 உம் உள்ளன. சபை எல்லைக்குள் ஒரு நாளுக்கு தொன் 10 - 12 வரையான குப்பைகள் சேர்க்கப்படும். இவ் சேர்க்கப்பட்ட குப்பைகள் ஒரு நாளைக்கு 6 தொன் மட்டும் எடுக்கப்படுகின்றது. இதில்

4 -5 தொன் அழிவடைந்து செல்கின்ற போதிலும் 01 தொன் அழிவடைந்து செல்லாதுள்ளன. சில தனியார் காணிக்கு இந்த அழிவடையும் குப்பைகள் பிரதேச சபையினால் கிடங்கு தோண்டப்பட்டு போடப்படுகின்ற போதும் அதற்கான சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்படும் சுற்றாடல் சான்றிதழ் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 62 வாக்கு விடயங்களுக்கு மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 57,286,300 பெறுமதியான ஒதுக்கீடு 100 வீதம் சேமிப்பாக காணப்பட்டமையினால் இவ் பாதீடு வினைத்திறனாக பயன்படுத்தப்படாதிருந்தது.

**3.7 செயலாற்றல்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையினால் மீளாய்வாண்டை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் அடையப்படவேண்டிய 71 செயற்பாடுகள் 2015 ஆண்டு இறுதியில் அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) 4 வருட திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூபா 20,900,000 உள்ள 8 திட்டங்கள் 2015 ஆண்டு இறுதி வரை முடிவுறுத்தப்படவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) உள்ளக கணக்காய்வு

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) சொத்து முகாமைத்துவம்